Y.M.C.A.


Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆனி 24    08 - 07 - 1992    புதன்கிழமை    ஓசை 141


### ஆரம்ப ஆசிரியர் தெரிவு

## திட்டமிட்டவாறு நடைபெறும் கல்விபணிப்பாளர் நம்பிக்கை

ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்று யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார். நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமணக்கப்பலில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும் ஏனைய காகிதாதிகளும் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஏனெனில் இக்கப்பலில் பரீட்சை ஆவணங்கள் என்று [4ஆம் பக்கம் பார்க்க]

# இயக்கச்சி மீது படையெடுப்பு நடத்த

# இராணுவ படையணிகள் சீரமைப்பு

## இரு முனைத் தாக்குதலுக்கு திட்டம்

(யாழ்ப்பாணம்)

தற்சமயம் வாடியடிப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவம் இயக்கச்சி மீது பெரும் படையெடுப்பை நடத்தும் நோக்குடன் தனது படையணிகளை சீரமைப்பு செய்து வருகிறது. இந்த இயக்கச்சி மீதான படையெடுப்பிற்கு உதவியாக ஆனையிறவு முகாமிலிருந்தும் ஒரு போர்முனையை திறப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

வெற்றிலைக்கேணியிலிருந்து வாடியடிப் பகுதிக்கு நகர்ந்த போது விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்த சிறிலங்கா இராணுவம், கடந்த இரு நாட்களாக தனது நிலைகளைப் பலப்படுத்திவருவதுடன் தனது பேரிழப்புகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் படையணிகளை சீரமைத்தும் வருகிறது.

இச்சீரமைப்பு வேலைகள் முடிவுற்றதும் இயக்கச்சி மீதான படையெடுப்பு எவ்வேளையிலும் தொடங்கலாம் எனவும் தெரிய வருகிறது. இயக்கச்சி மீதான இப்படையெடுப்பின் போது வாடியடிச் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாக ஒரு போர்முனை ஆரம்பிக்கப்படும் வேளையில், ஆனையிறவு முகாமில் இருந்து வடக்குப் பக்கமாக இயக்கச்சியை நோக்கி ஓர் புதியபோர்முனை ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### பொன்னாலை, மூளாய் மீது எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், சுழிபுரம், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதல்களின் போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதல்களால் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை. (க)

### தாண்டிக்குளம் தடைமுகாமில் துண்டிக்கப்பட்ட தலை

(கொழும்பு)

தாண்டிக்குளம் இராணுவத் தடைமுகாமில் துண்டிக்கப்பட்ட தலையொன்று பெட்டிக்குள் வைத்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் புளொட் இயக்கத்தினர் சோதனையிடும் தடைமுகாமில் ஆண் ஒருவரின் தலையொன்று வைக்கப்பட்ட பெட்டி அநாதரவான நிலையில் கிடக்க காணப்பட்டுள்ளது.

### தொண்டாமீது பொறாமை கொள்வதில் அர்த்தமில்லை

- அமைச்சர் ரணசிங்கா

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் மீது பொறாமை கொள்வதில் அர்த்தம் எதுவுமில்லை என்று தகவற்றுறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்தார். நேற்று முன்தினம் காலை தமது அமைச்சு

தான் சார்ந்த மக்களுக்கு நேர்மையோடு சேவை செய்கிறார். இதற்காக அவர் மீது பொறாமைப்படுவதில் அர்த்தம் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டார்.

அத்துடன் அமைச்சர் தொண்டமான் இந்திய வம்

## 9 உளவாளிகளுக்கு வவுனி. மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களிடையில் வாழ்ந்து கொண்டு, தாயகபூமியை எதிரிக்கு காட்டிக் கொடுக்கும் உளவுவேலையில் ஈடுபட்டிருந்த ஒன்பது பேருக்கு விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மரண தண்டனை வழங்கினர்.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள சோதனைச் சாவடிக்கு சமீபமாக பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் முன்னிலையில் இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தமது தனிப்பட்ட சிறு தேவைகளுக்காக சிறிலங்கா இராணுவத்துடன் தொடர்புகளைப் பலப்படுத்தி தாயகம் பற்றிய விசேட செய்திகளை வழங்கி வந்த இவர்களை இராணுவத்தினர் சில சிறிய உதவிகள் மூலம் கவர்ந்து இழுத்து வைத்திருந்தனர் என்பதும், இவர்கள் வழங்கிய தகவல்கள் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் என்பன பற்றியும் அண்மையில் விடுதலைப் புலிகளால் அம்பலப்படுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

செல்லையா அம்பிகைபாலன் (வயது 38 தாமரைக்குளம் அடம்பன், மன்னார்), பேதுரு சந்தான் (வயது 48 தாமரைக்குளம் அடம்பன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

மட்டக்களப்பு - பெண்டுகள்சேனையில்

## ராணுவ முற்றுகையைஎதிர்த்து புலிகள் உக்கிரத் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம் பெண்டுகள்சேனை என்னும் இடத்திலிருக்கும் விடுதலைப் புலிகள் முகாமைச் சுற்றி வளைக்க முயன்ற சிறிலங்காப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உக்

சண்டையின் போது எட்டுப் போராளிகள் வீரச்சாவை அடைந்தனர்.

படையினர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட போது ஒரு உலங்கு வானூர்தி இராணுவத்திற்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டதுடன் வாகனேரி முகாமிலிருந்து எறிகணை வீச்சுகளும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

## பணம்பறிக்கும் கும்பலில் ஒருவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதியிலிருந்து கொழும்புக்கு வரும் மக்களிடம் சி.ஐ.டி எனக் கூறி பணம் பறிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவர் புறக்கோட்டைப் பகுதியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். போலிச் சி.ஐ.டிக்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக எச்சரித்திருக்கும் பொலிசார் மேலும், ரயில் நிலையம், பஸ் நிலையம் வங்கிகள், விடுதிகள் என்பவற்றில் தமிழ் மக்களின் நடமாட்டத்தை அவதானிப்போர் பின்தொடர்ந்து சென்று பணம் பறிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் கூறியுள்ளனர். எனவே இத்தகையவர்களின் நடமாட்டத்தை அவதானிப்போர் உடனடியாக அருகிலுள்ள பொலிசாருக்கு தகவல் அளிக்கும்படி புறக்கோட்டை குற்றத் தடுப்பு புலானாய்வு அதிகாரி அன்ரன் திலகரட்னா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## புலிகளின் தலைவர் குறித்து பிரேமாவுடன் பேசவுள்ளேன்

### -இந்திய வெளியுறவு இணை அமைச்சர்

(சென்னை)

தலைவர் பிரபாகரன் உட்பட விடுதலைப்புலிகள் சிலரை நாடுகடத்துவது பற்றி சிறிலங்காவின் அதிபர் பிரேமதாசாவுடன் பேச்சு நடத்தப் போவதாக கொழும்பு செல்லும் வழியில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் எட்வார்டோ பெலய்ரோ தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்; இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதில் இந்தியா அக்கறை கொண்டிருப்பதாகவும், தாமாகவே முன்வந்து திரும்

(4ஆம் பக்கம் பார்க்க)

அலுவலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திய அவர் அங்கு மேலும் பேசுகையில்; தொண்டமான் ஒரு நேர்மைமிக்க தலைவர். அவர் சாவளியினருக்கு பிரஜா உரிமை பெற்றுக் கொடுப்பதில் வெற்றி கண்டார். இந்திய வம்சாவளி மக்களின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பொருள்கள் இறக்க அனுமதி கோரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

''குமண'' கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்திடம் அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

ஊரடங்கு அமுலில் உள்ளதால் நேற்று முன்தினம் பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்த இக் கப்பலில் இருந்து இதுவரை பொருள்கள் இறக்கப்படவில்லை. இதனால் பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் ஊரடங்கைத் தளர்த்துவதன் மூலம் இக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு அனுமதிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் கோரிக்கை விடுத்திருக்கிறார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்திடம் இக் கோரிக்கை அடங்கிய செய்தி வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (சு) (பா)

## அத். பொருள்கள் அனுப்ப நடவடிக்கை எருக்கவும்

### - அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான சில அத்தியாவசியப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறார்.

இம் மாவட்டத்தில் தற்பொழுது கையிருப்புக் குறைவாக உள்ள மண்ணெண்ணை, மா உட்பட மேலும் சில அத்தியாவசியப் பொருள்களை கப்பல் மூலம் அனுப்பிவைப்பதற்கு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும்படி மேற்படி அமைச்சின் செயலாருக்கு விசேட வானொலிச் செய்தி ஒன்று நேற்று அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகராலய அலுவலகத்தின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இது போன்ற வேண்டுகோள்கள் அடங்கிய செய்திகள் ஏற்கனவே இரு தடவைகள் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். (சு) (பா)

## புத்தரின் போதனைக்குமாறாக நடைபெறும்கொடூர தாக்குதல்

### - நயினாதீவு திவ்ய ஜீவன சங்கம்

(யாழ்ப்பாணம்)

புத்த பெருமானின் அதி உயர்ந்த போதனைகள் அனைத்திற்கும் முற்றிலும் எதிர்மாறாக நடத்தப்படுகிற கொடூரத் தாக்குதல்கள் உடன்நிறுத்தப்பட வேண்டும். அண்மையில் வற்றாப்பளை அம்பாள் ஆலயம் மீதும், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலின் பின் மக்கள் ஆலயங்களில் தஞ்சம் புகவே அஞ்சுகின்றனர்.

—இவ்வாறு நயினாதீவு திவ்ய ஜீவன சங்கக் கிளைச் செயலாளர் நா. கோபாலகிருஷ்ணன் நயினாதீவு உதவி அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யுத்தத்தின் பெயரால் மனித உயிர்கள், உடைமைகள் அழிக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். மனித உயிர்கள் அழிய அழிய பகைமை உணர்வு மேலோங்கி சமாதானப் பேச்சிற்கே வழியில்லா

[4 ஆம்பக்கம் பார்க்க]

புலிகளுக்கும் இடையே உக்கிர மோதல் ஏற்பட்டது. சுமார் முப்பது நிமிடங்கள் வரை இத்தாக்குதல் நீடித்தது. நேற்றுமுன்தினம் காலை ஒன்பது முப்பத்தைந்து மணியளவில் நடைபெற்ற இந்த மோதல்களில் பதின்மூன்று விடுதலைப்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரி இராணுவ முகாமிலிருந்தும், புலி பாய்ந்த கல் இராணுவ முகாமிலிருந்தும் வெளியேறிய இராணுவத்தினர் பெண்டுகள் சேனை என்னும் இடத்திலிருந்த விடுதலைப்புலிகள் முகாமைச் சுற்றிவளைக்க முயன்றனர். அப்போது ஏற்பட்ட மோதலில் ஐந்து போராளிகள் வீரச்சாவை அடைந்தனர். படையினரின் இந்த முற்றுகையை முறியடிக்க விடுதலைப் புலிகளின் மற்றுமொரு அணி படையினர் மீது தாக்குதல் நடத்தியது. இந்த மீட்புச்

## பெண்டுகள்சேனையில் 13 வேங்கைகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் பெண்டுகள் சேனைப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது பதின்மூன்று போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். இவர்களின் விபரம் வருமாறு; கப்டன் ரமணி (தம்பிமுத்து நாகேந்திரன், கிண்ணையடி வாழைச்சேனை) லெப்டினன்ட் சொரூபசீலன் (விஜயன், கந்தமுத்து தவராஜா மாவடிவேம்பு சித்தாண்டி) 2 ஆம் லெப்டினன்ட் சிறிகாந்தலிங்கம் (சேதுகாவல் பிள்ளை சத்தியவடிவேல், எருவில் மட்டக்களப்பு) வீரவேங்கை குகநேசன் (டிகோ, தங்கராசா காராளலிங்கம், அம்பிளாந்துறை மட்டக்களப்பு) வீரவேங்கை பவளமூர்த்தி (பிரகாஷ், கனகசுந்தரம் சுதா, பாண்டிருப்பு கல்முனை) வீரவேங்கை சேதுராஜா (காந்தன், தம்பிராசா கண்ணன், கிரான் மட்டக்களப்பு) வீரவேங்கை ஜேசுசிறி (தம்பிராசா இராசதுரை கல்முனை) வீரவேங்கை தட்சணாமூர்த்தி (முருகையாபிள்ளை தர்மலிங்கம், காரைதீவு அம்பாறை) வீரவேங்கை ராஜன் (குமாரசாமி கலைச்செல்வன், கிரான்குளம் மட்டக்களப்பு) வீரவேங்கை தயான் (முத்துவேல் மோகன் பொருவில் மட்டக்களப்பு) வீரவேங்கை புவி (தங்கராஜா சந்திரன் மண்டூர் மட்டக்களப்பு) வீரவேங்கை தேவானந்தன் (சங்கரன் மாதவன் அம்பாறை) வீரவேங்கை உமைகுமார் (முகுந்தன் கணபதி கதிர்காமலிங்கம் பதுளை ஆகியோர் ஆவார். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# 18 அப்பாவித் தமிழர்கள் அம்பாறையில் படுகொலை

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டத்தின் காட்டு ஓரக் கிராமங்களில் வாழ்ந்த தமிழர்களில் பதினெட்டுப்பேர் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, முஸ்லிம் காடையர்களதும், இராணுவத்தினரதும் தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து காட்டு ஓரங்களில் தங்கியிருந்த அப்பாவித் தமிழ்மக்களே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் சுமார் ஐம்பத்தைந்து தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க்கட்சிகள் திட்டம் சுத. கட்சியால் நிராகரிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களால் முன் வைக்கப்பட்ட நான்கு அம்சத் திட்டத்தை நிராகரிப்பது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்றக்குழு முடிவு செய்துள்ளது.

நேற்றுமுன்தினம்மாலையில் நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த நான்கு அம்சத் திட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்கப்படும் என்று நவசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆப்கானின் ஆட்சிமாற்றம் சமாதானத்தை ஏற்படுத்தும்?

கடந்த பதின்னான்கு வருட காலமாகவே வன்முறைகளையும் யுத்தங்களையும் கண்டு வந்த ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நஜிபுல்லா அரசின் வீழ்ச்சி ஒரு வெற்றியாகவோ அல்லது ஒருவித ஆறுதலாகவோ அமைந்திருக்கும் ஆனால் ஆப்கானிஸ்தானை யார் ஆட்சி செய்வதென்று முஜாகுதின் கொரில்லாக்குழுக்களிடையே இடம்பெறும் மோதல் அவர்களுடைய எதிர்பார்ப்புகளில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

இந் நிலைமையில் பாகிஸ்தானுடைய ஆதரவுடன் பெஷாவரில்கொரில்லாக்குழுக்களிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று யார் ஆட்சி செய்வது என்பதையிட்டு சில உடன்பாடுகள் ஏற்பட்டன.

அந்தவகையில் இவ் உடன்படிக்கையின்டடி முதல்நான்கு மாத காலத்திற்கு ''நிஜாதி மிலி'' அமைப்பின் தலைவரான சிப்கௌதுல்லா முஜாகியிடம் ஜனாதிபதிப்பொறுப்பை ஒப்படைப்பதென உடன்பாடு ஏற்பட்டது.

67 வயதான அல் அழல் பல்கலைக்கழக முன்னாள்பேராசிரியரான முஜாகிதி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்மைக்கு இவருடைய குழு ஏனைய குழுக்களை அணைத்துச் செல்லக்கூடியதாக இருந்ததே காரணம் எனக் கூறப்படுகிறது.

ஒப்பந்தப்படி முஜாகிதியின் நான்கு மாதகால ஆட்சி கடந்தவாரம் முடிவடைந்த நிலையிலும் ஆட்சியிலிருந்து இறங்குவதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தான் ஆதரவை தான் பெற்றிருந்தால் தொடர்ந்து ஆட்சியில் நிலைத்திருக்கமுடியும் என நம்பியபோதிலும் தொடர்ந்து ஆட்சியில் நிலைத்திருக்க பாகிஸ்தான் ஆதரவு தெரிவிக்கவில்லை.

இதேவேளை காபூலிலும் சுற்றுப்புறங்களிலும் அவருக்கு எதிராக கொரில்லாக்களின் பலம் அதிகமாக காணப்பட்ட நிலையில் அவரால் தொடர்ந்து தாக்குப்பிடிக்கமுடியவில்லை.

இதனைத்தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (10 தினங்களுக்கு முன்) தனது ஆட்சிப்பொறுப்பை பத்துப்பேர் கொண்ட உயர் ஆட்சிப் பீடத்திடம் அவர் கையளித்

ராலும் பயிற்சி வழங்கப்பட்டவராவார். தலைநகரான காபூலின் பெரும்பாலான பகுதிகள் இவரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

ஆப்கானிஸ்தானில் அமைதியும் சட்டம் ஒழுங்கைக் கொண்டு வருவதே தனது முக்கிய பணி எனக் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

ரபானியின் இவ் ஜனாதிபதிப் பதவி கூட நிரந்தரமானதல்ல. பெஷாவரில் எட்டப்பட்ட உடன்படிக்கையின்படி நான்கு மாத காலங்களுக்கு மட்டுமே அவர் பதவியில் இருக்க முடியும்.

நான்கு மாத காலத்தின் பின்னர் தேர்தல் நடைபெறும் எனவும் அதில் வெற்றிபெறும் ஒருவரே அடுத்ததாக ஆட்சியில் அமர்வதெனவும் பெஷாவரில் சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டன.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் தேர்தலை நடாத்தக்கூடிய சூழ்நிலைமையை ஏற்படுத்துவதே ரபானியின் முக்கிய பொறுப்பாக இருக்கும். அவருக்குள்ள கெரில்லாப் பலத்தைக் கொண்டு அவர் அதனைச் சாதிப்பார் என்றே பலரும் எதிர்பார்க்கின்றனர்.

மற்றொரு பலம் வாய்ந்த கெரில்லாக் குழுவான 'ஹில்டி இஸ்லாமி' அமைப்பின் தலைவரான குல்புதின் ஹெக்மத்தியார் ரபானிக்கு ஆதரவளித்துள்ளது ரபானிக்கு முக்கிய பலம் சேர்க்கும் ஒரு விடயமாகவே கருதப்படுகிறது.

அதிதீவிர மத அடிப்படைவாதி எனக் கூறப்படும் ஹெக்மத்தியார் இன்னமும் காபூலுக்கு வந்து சேரவில்லை. முன்னைய அரசாங்கத்தின் படைகள் காபூலில் இருக்கும் வரை தான் காபூலுக்கு வரப்போவதில்லை என அவர் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் பங்குகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை அவர் நிராகரித்து விட்டார். ஆனால் அரசாங்கத்திற்குத்தான்ஆதரவளிப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

பாரதியார் போற்றிய

## யாழ்ப்பாணத்துச்சுவாமி அருளம்பல சுவாமிகளே

(யாழ்ப்பாணம்)

பாரதியார் பாடல்கள் சிலவற்றில் விதந்து குறிப்பிடப்படும் யாழ்ப்பாணத்துச் சுவாமி எனப்படுபவர், பருத்தித்துறை வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளம்பல சுவாமி அவர்களே. இதனைக் கிடைக்கக்கூடிய ஆதாரங்களைக் கொண்டு மறுக்க முடியாத வகையில் கலாநிதி ஞானகுமாரன் அவர்கள் நிறுவியுள்ளார். என்று தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் நடைபெற்ற பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள் நூல் வெளியீட்டில் கலந்து கொண்ட பேராசிரியர்அ.சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்தினார். அங்கு அவர் மேலும் பேசுகையில் கிடைக்கின்ற சிறுசிறு ஆதாரங்களைப் பயன்படுத்தி தெளிவான முறையில் நிறுவியுள்ள ஞானகுமாரனின் முயற்சி பாராட்டுக்கு உரியது என்றும் குறிப்பிட்டார்.

துணைவேந்தர் அ. துரைராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, நல்லை ஞானசம்பந்தர் ஆதின பீடாதிபதி, வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தன், மில்க்வைற் தொழில் நிலைய அதிபர் க. கனகராசா ஆகியோர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். மெய்யியல் துறை விரிவுரையாளர் சிவானந்தமூர்த்தியின் ஆய்வுரையைத் தொடர்ந்து நூலாசிரியரின் பதிலுரையும், எம்.கே. முருகானந்தனின் நன்றியுரையும் இடம்பெற்றது.

## எழுச்சி ஊர்வலமும் கூட்டமும்

(குருநகர்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் சிங்கள ஆக்கிரமிப்புப் படைக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்தி வரும் போராட்டத்தை ஆதரித்து எழுச்சி ஊர்வலமும், கூட்டமும் நேற்று முன்தினம்

அவசர

வேண்டுகோள்

## சமயத்தை சரியாக பின்பற்றி சமாதானம் ஏற்படுத்தலாம்

- ஜே. ஆர் ஆலோசனை

(கொழும்பு)

மத போதனைகளை சகலரும் பின்பற்றினால் சமாதானம் ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா கூறியுள்ளார். சமய போதகர்களின் போதனைகளுக்கேற்ப ஒவ்வொருவரும் அவரவர் சமயத்தை சரியாகப் பின்பற்றும் போது நமது நாடு விமோசனமடைந்து சாந்தியும் சமாதானமும் நிலவும் என்றும் தெரிவித்துளார்.

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அருள்மிகு சிறிதுர்க்கா தேவி தேவஸ்தான மஹோற்சவ விழா வரும் 20ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. 26ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவன உற்சவமும் நடைபெறவுள்ளது என்றும் ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

## இசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இணைத்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நெய்தல் ஒலிப்பதிவு நடா வெளியீட்டுவிழா வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்ச்சியாக இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் தாயக எழுச்சிப்பாடல்களை உள்ளடக்கிய இன்னிசைக் கச்சேரியை நிகழ்த்தவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 1-ம், 2-ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு பரீட்சைகள் 1991

## கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.
மாணவர்கள் கவனத்திற்கு கொள்ளவும்.

| பரீட்சை | தொடங்கும் திகதி | முடிவடையும் திகதி |
|---|---|---|
| 1 ஆம் ஆண்டு கலை வர்த்தகம் / முகாமைத்துவம் | 17 - 08 - 92 | 25 - 08 - 92 |
| 2ஆம் ஆண்டு பொது / சிறப்பு - பகுதி 1, கலை/ வர்த்தகம் / முகாமைத் / துவம் / முதுமெய்யியல்மானி- தகுதிகாண் தேர்வு | 26 - 08 - 92 | 07 - 09 - 92 |
| 3 ஆம் ஆண்டு பொது / சிறப்பு - பகுதி 2, கலை / வர்த்தகம் / முகாமைத் துவம், முதுமெய்யியல்மானி- | 08 - 09 - 92 | 21 - 09 - 92 |

## தச்சுவேலை செய்யும் தொழிலாளருக்கு

தச்சுவேலை செய்யும் அனேக தொழிலாளரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களுக்கென்று ஓர்தொழிற் சங்கத்தை அமைத்து அவர்களே நிர்வாகத்தை மேற்கொள்ள உதவி செய்ய எமது சங்கம் தீர்மானித்துள்ளதால் 12 - 07 - 92 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 10, ஐயனார் கோயில் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சங்க அலுவலகத்தில் ஆர்வமும் சேவை மனப்பான்மையும் உள்ள தச்சு தொழிலாளர்கள் அனைவரும் வருகை தரும்படி வேண்டப்படுகின்றனர்.

சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்
(2775) யாழ். மாவட்டம்

## 31-ம் நாள் நினைவு



## கப்டன் நேசன்

(தியாகலிங்கம் மோகன்டாபு)

| ஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 8-09-1973 | 8-06-1992 |

தமிழீழ தேசத்தை மீட்டெடுக்க
தம்முயிர் தரும் வேங்கைகள் அணியில்,
கப்டன் நேசன் என்னும் எங்கள்
அப்பனே உன் நினைவில் நினையில் நாம்

முப்பத்தொரு நாள் என்ன? முந்நூறு நாள் என்ன?
இப் புவியில் வற்றுமோ உன் நினைவு?
தாயக மீட்பில் உன் தானையின் வழித் தடத்தில்
பயணங்கள் தொடரும். நாமும் அதனோடு.

-- தாய், சகோதரர்கள்

5ஆம் கட்டை,
அளம்பில், மணலாறு. (2763)

ஆட்சிப்பொறுப்பை பத்துப் பேர் கொண்ட உயர் ஆட்சிப் பீடத்திடம் அவர் கையளித்தார். இந்த ஆட்சிக்குழு பேராசிரியர் புர்ஹானுதீன் ரபானியிடம் ஜனாதிபதிப் பொறுப்பைக் கையளித்தது.

இஸ்லாமிய அறிஞரான பேராசிரியர் புர்ஹானுதீன் ரபானி மிகவும் சக்தி வாய்ந்த குழுவான ''ஜமாதே இஸ்லாமி'' அமைப்பின் தலைவராவார். 51 வயதான இவர் பாகிஸ்தானிய இராணுவத்தாலும், உளவுப் படையின

ராக விடுதலைப்புலிகள் நடத்தி வரும் போராட்டத்தை ஆதரித்து எழுச்சி ஊர்வலமும், கூட்டமும் நேற்று முன்தினம் (6-7-92) இரவு வண்ணார் பண்ணையில் நடைபெற்றது.

இரவு 8 மணியளவில் நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பமான எழுச்சி ஊர்வலம் வண்ணார்பண்ணைப்பகுதி வீதிகள் தோறும் நடைபெற்றது.

அதனை அடுத்து வண்ணார் பண்ணை மேற்கு பாரதி சன சமூக நிலைய முன்றலில் எழுச்சிக் கூட்டம் நடைபெற்றது. (21)

யும் இடம்பெற்றது.

## அவசர வேண்டுகோள்

ஆரம்ப ஆசிரிய தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவிருப்பதால் இதற்கான வினாத்தாள்கள் மற்றும் காகிதாதிகளை அனுப்பிவைக்குமாறு கூறி யாழ். கல்வி அதிகாரி இரா. சுந்தரலிங்கம் கொழும்பில் கல்வி அமைச்சிற்கு அவசரமுறையீடு செய்துள்ளார். (பா)

| | | |
|---|---|---|
| சிறப்பு - பகுதி 2, கலை / வர்த்தகம் / முகாமைத்துவம், முதுமெய்யியல்மாணி - தகுதிகாண் தேர்வு | 08 - 09 - 92 | 21 - 09 - 92 |
| 4 ஆம் ஆண்டு சிறப்பு பகுதி 3 கலை / வர்த்தகம் முகாமைத்துவம் / முதுமெய்யியல்மாணி - தகுதிகாண் தேர்வு | 22 - 09 - 92 | 26 - 09 - 92 |

(சி/4665)

— பதிவாளர்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி




### வீரவேங்கை வசந்தன்

(காசிப்பிள்ளை உதயகுமார்)

வீரஜனனம் 29 - 01 - 1967 — வீரச்சாவு 08 - 07 - 1987

திதி. 11 - 07 - 1992

இன்றோடு நீ எம்மை பிரிந்து
ஐந்தாண்டானது உதயனே
கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும் மாறவில்லை
அன்னை மண் காக்க வரிப்புலியானாய்
களங்கள் பல கண்டாய்
கடைசியாய் தொண்டமனாற்றில்
காவியமானாய்
உனது கனவுகள் நனவாகும்
நாள் வெகு தூரத்தில் இல்லை
நாளை மலரும் தமிழீழம் - அதில்
மீண்டும் உதித்திடுவாய் உதயனே.

உன் பிரிவால் துயரும்
அம்மா, சகோதரர்கள்

கோப்பாய் (2769)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### 2ஆம் லெப்டினன்ட் சின்னப்பர்

(கலகராசா பிரபானந்தன்)

| வீரஜனனம் : | திதி : | வீரச்சாவு: |
|---|---|---|
| 21 – 03 – 71 | 08 – 07 – 1992 | 20 – 06 – 91 |

(20 - 06 - 91 அன்று மணலாற்று நேரடிமோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.)

குடும்பத்தினர்

சசிக்குமார் வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

(2776)

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-07-08

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ சிறி (சீவரத்தினம் கிருஸ்ணதாஸ் - 30 ஏக்கர். திருக்கோணமலை.)

தொண்டமானாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

வசந்தன் (காசிப்பிள்ளை உதயகுமார் - நாவற்கட்டை, கோப்பாய்.)

பெலவத்தை சிறிலங்கா இராணுவ தடுப்பு முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன் உட்பட 2 தமிழ் இளைஞர்கள்.

மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கர்ப்பிணிப் பெண், கணவர், 7 வயது மகன், மூதாட்டி ஆகிய 4 தமிழர்கள்.

யாழ். கரவெட்டியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி, பரந்தன், நவஜீவனம் அருகில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு யாழ். நல்லூர்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். நிக்சன் (ஞானப்பிரகாசம் நிசாந்தன் யாழ்ப்பாணம்.)

அன்பு (அம்பிகைபாகன் அன்பழகன் - 22, அன்பழகன் வீதி, நாயன்மார்கட்டு.)

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 8 தமிழர்கள்.

திருக்கோணமலைக்கு வேலைக்குச் சென்று காணாமல் போன புன்னைச்சோலை காளிகோயில் வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

திருக்கோணமலை கட்டைபறிச்சான், தோப்பூர், பள்ளிக்குடியிருப்புக் காடுகளில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பல தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4663)

### சிந்தனைக்கு

மனிதர் அடையும் விவேகம், அவர்கள் அனுபவத்தைப் பொறுத்ததல்ல. அனுபவம் அடைய அவர்களுக்கு உள்ள ஆற்றலைப் பொறுத்ததே.

—ஜார்ஜ் பெர்னார்ட்ஷா

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## கல்விக்குத் தடை - அரசு திட்டமிருகிறது

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சை வடமாகாணத்தில் நடைபெறுமா என்ற கேள்வி தற்பொழுது எழுந்துள்ளது. பரீட்சைக்கான திகதி நெருங்கிக் கொண்டிருக்கின்ற வேளையிலும் பரீட்சைக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்து கொள்ளப்படாமையே இதற்குக் காரணமாகும்.

கடந்த இரு வருடங்களிலும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைகள் உரிய காலத்தில் நடத்தப்படவில்லை. பின்னர் எவ்வளவோ வற்புறுத்தல்களின் பிறகு விசேட பரீட்சைகள் என இப்பரீட்சைகள் நடத்தப்பட்டன. ஆனால் சிங்கள அரசாங்கம் தானே முழுப் பொறுப்பும் எடுத்து நடத்திய அப்பரீட்சையை பிறகு தானே அங்கீகரிக்க மறுத்தது. இதன்மூலம் தமிழ் மாணவரின் பல்கலைக்கழக அனுமதிக்கு முட்டுக்கட்டை போட்டது. இது தொடர்பாக எழுந்த பிரச்சினையின் காரணமாக இனிமேல் விசேட பரீட்சைகள் நடத்தப்பட மாட்டாது எனவும் அறிவிப்புச் செய்தது.

இந்நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி நடத்த வேண்டிய பரீட்சைக்கான எந்தவித ஆயத்தங்களையும் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளாமல் இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது இவ்வருடத்துக்குரிய பரீட்சையை முற்றுமுழுதாகவே நடத்தாமல் விடும் யோசனை அரசாங்கத்திடம் உள்ளது போன்று தெரிகிறது. இதன்மூலம் முற்றுமுழுதாகவே ஒரு வருடத்திற்கு உள்ள மாணவர்களைப் புறந்தள்ளி விடலாம் என அரசு எண்ணுவது போல உள்ளது. விசேட பரீட்சை எதுவும் நடத்தப்படாது என அறிவித்துள்ள உயர்கல்வி அமைச்சர் பரீட்சையை நடத்த முயற்சிகள் எதையும் எடுக்காமையே இவ்வாறு எண்ணத் தோன்றுவதற்குக் காரணமாகிறது.

இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாண குடாநாட்டிற்கான போக்குவரத்து வழிகள் பெரும்பாலும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் தரைவழி

# வின்னிமண்டேலாவின் புதியகட்சியால் ஏ. என். சி. பிளவுபடும் அபாயம்

நெல்சன் மண்டேலா சிறையில் இருந்து விடுதலையடைந்து வெளியேவரும்வரையில் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர்போல செல்வாக்கான ஒருவராக இருந்து இயங்கியவர்தான் அவரது மனைவி வின்னி மண்டேலா. ஆனால் அவருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அவரது செல்வாக்கைக் குறைத்த அதே வேளையில் ஒருவருமே எதிர்பாராத முடிவொன்றை நெல்சன் மண்டேலா அவருக்கு அளித்தார். வின்னியைத்தான்விவாகரத்து செய்யப்போவதாக அவர் அறிவித்தபோது உலகமே வியப்படைந்தது.

ஆனால், வின்னியின் அரசியல் எதிர்காலம் எப்படி அமையும் என்ற கேள்வியே அப்போது எல்லோருக்கும் எழுந்தது.

இக்கேள்விகளுக்குப் பதிலளிப்பது போல் ஆபிரிக்க தேசிய காங்கிரசிற்குப் போட்டியாக புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ள தன்னுடைய முடிவை வின்னி அறிவித்திருக்கின்றார். இது தொடர்பான பல தகவல்களை லண்டனில் இருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்க தேசிய காங்கிரசில் உள்ள தீவிரவாதிகளைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளலாம் என வின்னி நம்பிக்கை கொண்டிருக்கின்றார். இது தொடர்பாக தன்னுடைய திட்டம் என்ன என்பதை தன்னுடைய கட்சி ஆதரவாளர்களுடன் கடந்தவாரம் நடத்திய ரகசிய கூட்டமொன்றில் அவர் விளக்கியுள்ளார்.

ஆபிரிக்கதேசிய காங்கிரசிற்குப் போட்டியாக தீவிரமான பலம்வாய்ந்த கட்சி ஒன்றைக் கட்டியெழுப்ப தன்னிடம் போதிய பணம் இருக்கின்றது என்று அவர் தெரிவிக்கின்றார். இது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மக்கள் கட்சி என அழைக்கப்படும்.

புதிய அரசியல் அமைப்பொன்றை உருவாக்குவதற்கு வின்னி மேற்கொண்டுள்ள முடிவையிட்டு ஆபிரிக்கதேசிய காங்கிரசின் தலைவரான நெல்சன் மண்டேலாவும் அவரது ஆதரவாளர்களும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளனர்.

வின்னி நடத்திய ரகசியக் கூட்டம் தொடர்பான தகவல்கள் நெல்சன் மண்டேலாவின் ஆதரவாளர்களால் அவதானிக்கப்பட்டதுடன், அது பற்றிய தகவல்களையும் அவரது உளவுப் பிரிவினர் பெற்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து வின்னியின் நடவடிக்கைகள் பற்றி உயர்மட்ட விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு மண்டேலா உத்தரவிட்டுள்ளார்.

புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்காக வின்னி மேற்கொள்ளும். எந்தவிதமான நடவடிக்கைகளும் ஆபிரிக்கதேசிய காங்கிரஸின் நடவடிக்கைகளையும் அதன் செல்வாக்கையும் பெரிதும் பாதிக்கும் என காங்கிரஸின் தலைவர்கள் அஞ்சுகின்றனர்.

ஆபிரிக்க தேசியகாங்கிரஸை உடைக்கவோ புதிய கட்சியை அமைக்கவோ தான் முயல்வதாக வெளியான செய்திகளை மறுத்துள்ள வின்னி "நான் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் ஒரு உண்மையான ஒழுக்கமான உறுப்பினராகவே இருக்கிறேன்" என்று பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் வின்னியின் நடவடிக்கைகள் பற்றி வெளியான செய்திகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்தியுள்ள அவரது நெருங்கிய ஆதரவாளர்கள் அது தொடர்பாக உத்தியோக பூர்வமான அறிவிப்பை உடனடியாக வெளியிட முடியாதுள்ள சூழ்நிலையையும் விளக்கியுள்ளார்.

முதலாவது இது தொடர்பான ஆலோசனைகள் இன்னமும் முடிவடையவில்லை. இரண்டாவதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்குள்ளேயே தனியான ஒரு பிரிவாக இருந்து இயங்கினால் போதுமென சில ஆதரவாளர்கள் கருத்து கொண்டுள்ளனர். வேறுசிலர் தனியான கட்சியை உருவாக்க வேண்டும் என வாதிடுகின்றனர்.

"வின்னி புதிய கட்சி ஒன்றை அமைக்கின்றார் என்றால் அது மண்டேலாவுக்குப் போட்டியாகவோ அல்லது எதிராகவோ என்று கருத முடியாது" என வின்னியின் ஆதரவாளர் ஒருவர் சொன்னார். "காங்கிரஸில் உள்ளவர்கள் மிதவாதப் போக்கைக் கைவிட்டு தீவிரமாகச் செயற்படுவதை ஊக்குவிக்கவே இந்த முயற்சி" என அவர் இதற்கான காரணத்தையும் கூறினார்.

> ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவரான டாக்டர் நெல்சன் மண்டேலாவும் அவரது மனைவியான திருமதி வின்னி மண்டேலாவும் அண்மையில் விவாகரத்துச் செய்து கொண்டதும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தென் ஆபிரிக்கா அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பொய்ப்பதாங் படுகொளைகளை அடுத்து தேக்க நிலையை அடைந்து இருப்பதும் தெரிந்ததே.

கட்சிக்குள் ஏற்பட்டகடுமையான கோஷ்டிப் பூசல்களைத் தெரிந்தே வின்னி மண்டேலா புதிய கட்சியை ஆரம்பிக்கும் முடிவை மேற்கொண்டதாக "சண்டே ரைம்ஸ்" தெரிவித்தது. 14 வயதான கட்சி உறுப்பினர் ஒருவர் உட்பட பலருடைய கொலையில் வின்னி சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்ததை அடுத்தே கட்சிக்குள் மோதல்கள் ஆரம்பமாகியது.

இதன் பின்னர் வின்னிக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மூத்த தலைவர்களுக்கும் இடையே மோதல்கள் ஆரம்பமாகின. மண்டேலாவுடனான விவகாரத்தை பயன்படுத்திய அவர்கள் கட்சியின் சமூக சேவைத் திணைக்களத்தில் இருந்து வின்னியை ராஜினாமா செய்யத் தூண்டினார்கள்.

மேற்படி சமூக சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 80,000 பவுண்ஸ்காணாமல் போய்விட்டதாக கடந்த வாரம் எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து வின்னிக்கு எதிரான கூக்குரல்கள் மேலும் அதிகரித்தது.

காங்கிரசின் பெண்கள் முன்னணியின் தலைமைப் பதவியில் இருந்தும் வின்னி நீக்கப்பட்டார். இதற்கு எதிராக அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றையும் மேற்கொண்டனர்.

இவ்வாறு கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்புக்களால் சுதந்திரமாக இயங்க முடியாத நிலைமை வின்னிக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் அவரது ஆதரவாளர்கள் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பது மட்டுமே அவரை சுதந்திரமாக இயங்கச் செய்யும் என்று தெரிவித்துள்ளனர்.

நன்றி -
வீரகேசரி

## அ.தி.மு.க. வின் வெற்றி சொந்த பலத்தினால் அல்ல - வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

ஜெயலலிதா தலைமையிலானஅனைத்திந்தியஅண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் தனது சொந்த பலத்திலேயே தேர்தலில் பெரும்பான்மை பலத்தைப்பெற்றது என்றுகூற முடியாது என, தமிழ்நாடு

"அரசியலில் இணக்கமான நல்லுறவு என்பதெல்லாம் நிலையானதல்ல. காங்கிரஸ்காரருடன் சேர்ந்து கொண்டு என்னைக்கவிழ்க்க அ.தி.மு.க.வில் ஒரு பிரிவினரே சதி செய்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஈராக்கில் கார் குண்டுவெடிப்பு

## மித்தரோங்கின் மனைவி

## இனப்பூசலை முடிப்பதற்கு காமன்வெல்த் இணக்கம்

(மாஸ்கோ)

முன்னாள் சோவியத் யூனியன் குடியரசுகளிடையே இனப்பூசலை முடிவுக்கு கொண்டு வருவதற்காக கூட்டு அமைதிகாப்பு படை ஒன்றை உருவாக்குவதற்கு காமன் வெல்த் சுதந்திர குடியரசுகளின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் மாஸ்கோவில்நடைபெற்ற உச்சிமாநாட்டில் இந்த முடிவு எட்டப்பட்டது.

அமெரிக்க நீதிமன்ற

எனினும் முன்னாள் சோவியத்தின் அணு ஆயுதங்களின் எதிர்காலநிலை பற்றி உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை என்று செய்தியாளர்களிடம் பேசிய ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் தெரிவித்தார்.

இக் கூட்டு அமைதிப்படை முதலில் மால்டோவாவிற்கு அனுப்பப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாண குடா நாட்டிற்கான போக்குவரத்து வழிகள் பெரும் பாலும் அடைக்கப்பட்டுள்ள நிலையில் தரைவழி யாக வினாத்தாள்களை எடுத்து வருவது என் பது இயலாத காரியமாகும். இதேபோன்று காங் கேசன் துறை, பலாலி விமானத்தளம் ஆகிய பகு திகள் ஊடாக வினாத்தாள்களைக் கொண்டுவரு வதும் சிரமமான காரியமாகும். காங்கேசன் துறைக்கான போக்குவரத்துப் பாதையையுத்த சூன்யப் பிரதேசம்என அறிவித்துவிட்டு அதையே வாய்ப்பாக பயன்படுத்தி அப்பகுதிக்குள்படைஎடு த்துசிறிலங்கா இராணுவம்ஆக்கிரமித்ததோடு, அப் பாதையை மூடியுமுள்ளது. அத்தோடு, பருத்தித் துறையை வந்தடையும்கப்பல்களில்பரீட்சைக்கான கேள்விப் பத்திரங்களைக் கொணடுவருவதற்கும் போதிய கால அவகாசம் இருப்பதாக இல்லை. தற்பொழுது பருத்தித்துறைக்கு வந்து சேர்ந் துள்ள குமண கப்பல் கால அட்டவணையின்படி கொழும்பு சென்று திரும்புவதானாலும் அடுத்த மாதம் எட்டாம் திகதியே திரும்பும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் எட்டாம் திகதியும் திரும்பும் என்பதும் சந்தேகமே.

இந்நிலையில் பரீட்சை நடக்குமா? என்பதில், பலத்த கேள்வி எழுந்துள்ளது நியாயமானதே. ஆனால், இப்பரீட்சையை நடத்தவேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசாங்கத்தினதும், அதி காரிகளினதும் கடமையாகும். இலங்கை பூராவும் நடத்தப்படும் இப்பரீட்சையை அரசாங்கம் நடத் துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளாமல் விடு மானால் அது திட்டமிட்ட நடவடிக்கை என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் பரீட்சை நடத்தாமல் விடுவதற்கான வாய்ப்பே உயர்வான தாகும். திட்டமிட்ட ரீதியில் இனப்படுகொலை யையும், பொருளாதார வாழ்க்கையையும் அழித்து விடும் சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ்மக் களின் கல்வியையும் அழித்துவிட நடவடிக்கை மேற்கொள்வது புதுமையானதொன்றல்ல. அத் தோடு, கல்வி அழிப்பு நடவடிக்கைகளில் மேற் கொள்ளும் முதல் நடவடிக்கைகளும் இதுவல்ல. காலத்திற்குக் காலம் தமிழர்கல்வியை வேரறுக்க சிங்கள அரசு திட்டமிட்டே செயற்பட்டுவருகின் றது.

ஆனால், சிங்கள அரசாங்கத்தி டம் எவ்விடயத்தில் நீதி கிடைக்கும் என, தமிழ் மக்கள் எதிர்பார்ப்பார்களானால் அது மடமை. தமிழரின் சுதந்திரமான வாழ்வு அவர்களின் அர சியல் உரிமைகளை வென்றெடுப்பதிலேயே உள் ளது. இல்லாவிட்டால், இவ்வருடம் என்ன அடுத்துவரும் வருடங்களிலும் பரீட்சை இல்லா மல் போகலாம். சிலவேளை, நிரந்தரமாகவே இனி மேல் பரீட்சையே இல்லாமல் போய் விடலாம் ஏனெனில், சிங்களப் பேரினவாதம் அந்தள விற்கு தமிழரைஅழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கிறது.

தேர்தலில் பெரும்பான்மை பலத்தைப்பெற்றது என்றுகூற முடியாது என, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை யில் செய்தியாளர்களிடம் பேசிய இராமமூர்த்தி மேலும் கூறுகையில், இதற்கு 1987 -ம் ஆண்டு சட்டசபைத் தேர்த லில் காங்கிரஸ்கட்சி தனித் துப் போட்டியிட்டு பெற்ற வாக்குகளின் சான்று தரும் என்றும்,

தோழமைக் கட்சியின் உண ர்வுகளைப் புண்படுத்தும்வகை யில் அ.இ.அ.தி.மு.க.வினர் பேசுவது நல்லதல்ல என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக தமிழக முதல மைச்சர் செல்வி ஜெயலலிதா

## ஈராக்கில் கார் குண்டுவெடிப்பு

## மித்தரோங்கின் மனைவி மயிரிழையில் தப்பினார்

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டு ஜனாதி பதி மித்தரோங்கின் மனைவி டேலியலா மித்தரெண்ட் நேற்று வடஈராக்கில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம் பவமொன்றில் உயிர் தப்பி னார்.

ஈராக்கின்வடபகுதியிலுள்ள குருடிஸ் இன மக்களைப் பார் வையிட மூன்று நாள் பயண மாக ஈராக் வந்திருந்தார்.

இப்பகுதியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது அருகிலிருந்து கார் வெடித் துச் சிதறியது என்றும் இத னால் சுமார் 4 பேர் உயிரிழந் தனர் என்றும், 20 பேர் படு காயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

டேஷியலாவும், பிரான்ஸ் நாட்டு சேமநல மனிதநல துறை அமைச்சரும் காரில் இருந்தாதல் இருவரும் உயிர் தப்பியதாகவும் கூறப்படு கிறது.

டேலியலாவின் பயணம் ஈராக் அரசினால் ஒழுங்கு செய்யப்படாத பயணம் என் றும், அவரின் போக்கு முட் டாள் தனமானது என்றும், ஈராக்கின் இறையாண்மையை மீறுவது என்றும் ஈராக் பத்தி ரிகை குற்றம் சாட்டியுள்ளது.

## தூதுவரை வெளியேற பாக் உத்தரவு.

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிலிருக்கும் யூகோஸ்லாவியத் தூதுவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறும்படி பாகிஸ்தான் அரசு கேட்டுள்ளது. பெல் கிரேட்டில் கடைப்பிடிக்கப் படும் முஸ்லிம் எதிர்ப்புக் கொள்கைக்கு பதிலடி கொடுக் கும் முகமாகவே இந்நட வடிக்கை எடுக்கப்பட்டிருப்ப தாக அவதானிகள் கருதுகின் றனர்.

## இந். திரைப்படச்சட்டங்களை கடுமையாக்கத் திட்டம்

(டில்லி)

இந்தியாவில் திரைப்படங் களில் வன்முறை, பாலுணர் வைத் தூண்டும் காட்சிகள், மற்றும் இடைச் செருகல்கள் அதிகரித்து வருவதையடுத்து திரைப்பட சட்டங்களை கடு மையாக்கும் பொருட்டு திருத் தம் செய்வதற்கு இந்திய மத்திய அரசு முடிவு செய் துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன் தினம் கூடிய மத்திய அமைச் சரவை இந்தத் திருத்தங் களுக்கு அங்கீகாரம் அளித் துள்ளது.

இதன்படி, திரைப்படங் களில் வன்முறைக் காட்சிகள், பாலுணர்வுகளைத் தூண்டக் கூடிய காட்சிகள், இடைச் செருகல் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டால் ஐந்து லட் சம் ரூபாய் அபராதம் அல்லது ஐந்து ஆண்டு சிறைத் தண் டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். தற்போது இந்தத் தண்டனை ஒரு லட் சம் ரூபா அபராதம் அல்லது மூன்றாண்டு சிறைவாசம் என்று இருப்பது குறிப்பிடத் தக்கது.

## அகதி அந்தஸ்து

(ரொஹன்ரோ)

ரஷ்ய உதைபந்தாட்டக் குழு ஒன்றைச் சேர்ந்த13 பேர் கனடாவில் அகதி அந்தஸ்து கோரவுள்ளனர். 48 பேர் கொண்ட "மொஸ்கோ ஜய ண்ட்ஸ்" என்ற குழுவில் அங் கம் வகித்தவர்களே இந்த 13 பேருமாவர் இவர்கள் நாடு திரும்ப மறுத்ததையடுத்து ஏனையோர் அமெரிக்காவி ற்கு புறப்பட்டுச் சென்றுள்ள னர்.

## சிக்கந்தர் பந்திற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி?

ராஜ்ய சபாவில் எதிர்க்கட் சித் தலைவர் பதவி சிக்கந்தர் பந்திற்கு வழங்கப்பட வேண் டும் என்று லோக் சபாவின் எதிர்க்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி கடிதமொன் றின் மூலம் கேட்டுக் கொண் டுள்ளார்.

ராஜ்ய சபையில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு அதிக எண் ணிக்கையான வலு இருப்ப தால் பிரதான எதிர்க் கட்சி என்ற அந்தஸ்து அக்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என் றும் ராஜ்ய சபாத் தலைவ ருக்கு எழுதியுள்ள கடித மொன்றில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கனடாப் பிரதமர் கூட்டம்; கியூபெக் பற்றி முடிவில்லை

செனட் சீர்திருத்தம் குறி த்து கனடாவின் ஆங்கில மாகாண பிரதமர்கள் ஒரு இணக்கத்திற்கு வரத் தவறி யுள்ளதால் பிரெஞ்சுமொழி பேசும் கியூபெக் மாகாணம் சம்பந்தமான பிரிவினை அச் சம் அதிகரித்து வருகிறது.

பிரதமர் மல்ரோணி ஒன் டது மாகாணப் பிரதமர்களு டன் நடத்திய கூட்டத்தில் அதிக சுயாட்சி கோரும் கியூ பெக்கின் நிபந்தனை குறித்து அரசியல் அமைப்பு சீர்திருத் தத்தில் ஒரு முடிவுக்கு வரத் தவறிவிட்டனர்.

முன்தினம் மாஸ்கோவில்நடை பெற்ற உச்சிமாநாட்டில் இந்த முடிவு எட்டப்பட்டது.

அனுப்பப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க நீதிமன்ற

## துப்பாக்கிச் சூட்டிற்கு இருவர் பலி, மூவர் காயம்

(டெக்ஸாஸ்)

அமெரிக்க நீதிமன்றம் ஒன் றில் நடந்த ஒரு துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இரு வர் கொல்லப்பட்டதோடு, மூன்று பேர் காயமடைந்துள் ளனர். காயமடைந்தவர் களில் இருவர் நீதியரசர் களாவர்.

டாரண்ட் கவுண்டி நீதிமன் றத்தில் வைத்தே இச்சம்ப வம் நடைபெற்றது. வழக்கு விசாரணையின் போது நீதி யரசர்கள் மூவர் ஒன்றாக அமர்ந்திருந்த வேளையில் துப் பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கேம்பிரிட்ஜ் ஒக்ஸ்போர்ட்டில் ரஷ்ய உளவுப் பிரிவு

(லண்டன்)

1930 ஆம் ஆண்டுகளில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழ கத்திலிருந்து தெரிவானஉளவு கோஷ்டி ஒன்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உளவுகோஷ்டி ஒன்றுடன் இணைந்து செயற் பட்ட தகவல்கள் ரஷ்ய இரக சியப் பதிவுகள் மூலம் வெளி யாகியுள்ளன.

கார்டியன் பத்திரிகை இது பற்றிய செய்தியை இப்போது வெளியிட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகத் தில் ரஷ்ய உளவுப்பிரிவு தங்கு தடையின்றி ஊடுருவல் செய் துள்ளது. மந்திரிசபை தஸ்தா வேஜுகள் புகைப்படம் எடுக் கப்பட்டுள்ளன. உளவு ராஜ தந்திரி டொனால்ட் மக்லீன் இப்புகைப்படங்களை எடுத்தி ருக்கிறார்.

பாராளுமன்ற பதிவு சம்பந் தப்பட்ட புகைப்படங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழ கத்தில் சோவியத் யூனிய னுக்கு இரகசியங்களை அறி விக்க நியமிக்கப்பட்ட பிரதி நிதிகளில் மக்லீனும் ஒருவ ராவர்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உளவுக்குழுவின் செயற்பாடு கள் சிறிய அளவில் இருந்தா லும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக குழுவுக்கு தலைமை வகித்து ஸ்கொட் என்பவர் தமது பணியை பரந்த அள வில் செய்திருப்பதாக ரஷ்ய உளவுப் பிரிவு பதிவுகள் கூறு கின்றன.

ஸ்கொட் என்பது அவரது அடையாளப் பெயரெனவும் பதிவுகள் கூறுகின்றன. உளவுப் பிரதிநிதிகளின் பெயர்கள் வெளியிடப்படாத போதிலும் அவர்களின் பணிக்குபாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காஸாவில் குழு மோதல்; 24 பேர் காயமடைந்தனர்

(டெல்அவிவ்)

இஸ்ரேலினால் கைப்பற்றப் பட்டுள்ள காஸாப் பகுதியில் பாலஸ்தீன விடுதலை ஆதர வாளர்களுக்கும் பாலஸ்தீன தற்காப்பு இயக்கத்தின் ஆத ரவாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் 24 பேர் காயமடைந்துள்ளனர்.

மத்திய கிழக்கு சமாதான பேச்சுவார்த்தைகள் சம்பந்த மாக இரண்டு அமைச்சுகளுக் கிடையேயும் இருந்து வரும் கருத்துவேறுபாடு இந்த வன் செயல்களுக்கு காரணமாகும் என்றும்.

பாலஸ்தீனவிடுதலைஇயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தை களை ஆதரிக்கிறது ஆனால் தற்காப்பு இயக்கம் அதனை எதிர்க்கிறது என்றும் தெரிவிக் கப்படுகிறது.

ஈழநாதம்

# துன்புறும் மக்கள் துயர்போக்க சகலரும் முன் வரவேண்டும்

## -அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை மற்றும் இயற்கை அழிவுகளால் இடம்பெயர்ந்து வருகின்ற மக்களின் துயரங்களைப் போக்க பொது நிறுவனங்கள், பொதுமக்கள், மற்றும் மக்களின் நலன்விரும்பும் அமைப்புக்கள் முன் வர வேண்டும். என அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கைவிடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட பிரிவுகளில் பொறுப்பாக உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நிர்வாக அமைப்புக்களுடனும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி மக்களின் துயரங்களை போக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி தொடர்புகளை இலகுவாக்குமுகமாக அரச சார்பற்ற நிறுவனங்களும் அவை பொறுப்பேற்று சேவை ஆற்றும் பிரிவுகளும் வருமாறு;

தெல்லிப்பழை - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - அளவெட்டி, உடுவில் - சர்வோதயம் - மருதனார்மடம், சண்டிலிப்டாய் - அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சங்கானை -போரூட் - சுழிபுரம், கோப்பாய்-றெட்பானா- நீர்வேலி, நல்லூர் - அகதிகள் புனர்வாழ்வு நிதியம் - கல்வியங்காடு, யாழ்ப்பாணம்-சிறுவர் பாதுகாப்பு நிதியம் - அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்- யாழ்ப்பாணம், சாவகச்சேரி - அறவழிப் போராட்டக்குழு-நுணாவில், பருத்தித்துறை- போரூட் பருத்தித்துறை, கரவெட்டி-மெதடிஸ்தமிசன்- கரவெட்டி, மருதங்கேணி-தமிழர் புனர்வாழ்வுக்கழகம் - நாகர் கோவில், பளை-தமிழர் புனர்வாழ்வுக் கழகம்-பளை. (பா)

# சித்திர சிற்பக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான சித்திர சிற்பக் கண்காட்சி எதிர்வரும் 10, 11ஆம் திகதிகளில் யாழ் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இக்கண்காட்சிகாலை 9மணிக்கு ஆரம்பமாகி பாலை 4 மணிவரை நடைபெறும். (பா)

## மஞ்சள் அங்கிகள் களவு

(கொழும்பு)

புத்த விகாரைகளிலிருந்து மஞ்சள் அங்கிகள் களவாடப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகள் அணியும் மஞ்சள் அங்கிகள் திடீர் திடீரென காணாமல் போவாத நாடெங்கிலுமிருந்து பரவலாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக தகவல்துறை ராஜாங்க அமைச்சின் ஏ.கே. ரணசிங்க கூறியுள்ளார்.

# வானதியும், கஸ்தூரியும் காவியநாயகிகளாகிய காலமிது

## வளநாடன்

(குருநகர்)

''கண்ணகியையும், சீதையையும் காவிய தரத்திற்கு உயர்த்தப்பட்ட காலத்தில் அல்ல நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வானதியை- கஸ்தூரியை - டோறாவைக் காவிய நாயகிகளாகக் கண்டுகொண்டிருக்கும் யுகத்தில் நாம் வாழ்கிறோம். இந்த உண்மையை - யதார்த்தத்தை சிறார்கள் மத்தியில் விதைக்கும் படைப்புக்களே இன்றைய தேவைகளாகும்.

நேற்று (7-7-92) காலை கொழும்புத்துறை புனிதசூசையப்பர் வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த்தினவிழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய யாழ். மாவட்ட கலை, பண்டாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. வளநாடன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலயஅதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் விழா நடைபெற்றது.

எழுத்தாளர் திரு. செம்பியன்செல்வன், கௌரவ விருந்தினர் உரையில்:

''சிறந்த தலைமைத்துவம் தமிழர்களுக்குக்கிடைக்காமையாலேயே 1976 -ம் ஆண்டு வரை இந்த மண்ணில் அடிமைத் தளை விதைக்கப்பட்டிருந்தது.

புறநானூறைப் பாடிய பூங்குன்றனார் 'யாதுமூரே யாவரும் கேளிர்' என்று பாடியமைக்கு இணங்கவோ எமது தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள் என எண்ணத்தோன்றுகிறது'' என்றார்.

சிறப்புவிருந்தினர்உரையில்: பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா ''மொழி உணர்ச்சிதருவது, மொழிவாழ வைப்பது எமது மொழி, எமது மண் வாழ வேண்டுமானால் எமக்கு என ஒருநாடு அரசு தோன்றவேண்டும்'' என்றார்.

யாழ். கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதமவிருந்தினர் உரையில்:

''இந்த மண் எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கிறது. முழந்தாளிட்டு வாழ்வதிலும் பார்க்க நிமிர்ந்து நின்று சாவது மேலென்ற கவி பாரதி சொன்ன வாக்கியத்தைச் சிறார்களின் எழுச்சிப் பாடல் நிகழ்ச்சி நினைவூட்டியது'' என்றார்.

மாணவர்களின் கவியரங்கம், நாட்டுக்கூத்து, பேச்சு, நடனம், பாடல் ஆகியன விழாவைச் சிறப்புறச் செய்தன(21

## க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை

# விண்ணப்ப திகதியை பிற்போடக் கோரிக்கை

1992 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. (சா.த) பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதியைநீடிக்குமாறுகோரியாழ். கல்வியதிகாரி இரா. சுந்தரலிங்கம்கல்விஅமைச்சிற்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி கடந்த மாதம் 30 ஆம் திகதியாக இருந்தது மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் இன்னும் யாழ். கல்வித்திணைக்களம் வந்து சேராமையினாலேயே இந் நடவடிக்கையினை யாழ். கல்வி அதிகாரி மேற்கொண்டுள்ளார். (பா)

# சத்தியேந்திரா நினைவாக புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் சத்தியேந்திராவின் நினைவாக புலமைப் பரிசில் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் இணைந்து இத்திட்டத்தை உருவாக்கியுள்ளனர். இத் திட்டத்துக்கு மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களிடமிருந்து நன்கொடைகள் எதிர்பார்க்கப்படுகிறது. (75)

# கலிபர் தாக்குதல்

(குருநகர்)

மண்டைதீவுச்சந்தி சிறிலங்கா இராணுவக் காவலரணில் இருந்து நேற்று மாலை 5.45 மணிக்கு இராணுவம் யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கிக் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

தொடர்ச்சியாகவும் விட்டு விட்டும் மாலை 6.00 மணி வரை கலிபர் தாக்குதல் நடத்தப் பட்டது. வேறெந்த விபரங்களும் கிடைக்கவில்லை. [21]

# ஈரானிய குழு நம்பிக்கை

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையிலான ரயில் பாதை விஸ்தரிப்பை துரிதமாகச் செய்ய முடியும் என்று ஈரானிய பொறியியல் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது. இந்த ரயில் பாதையை விஸ்தரிக்கும் பணியை தம்மால் துரிதமாக மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ள இத்தூதுக் குழுவினர் இஸ்லாமிய விவகார அமைச்சர் அஸ்வரை அவரது அமைச்சில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

# கொழும்பில் பெருமழை; வேரோடு மரங்கள் சரிந்தன

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன் தினம்பிற்பகலில் பெய்த சிறிய நேர மழையினால் வெள்ளக் காடாகியது வீதியோர மரங்கள் முறிந்து விழுந்தமையால் போக்குவரத்துககு தடைகள் ஏற்பட்டது. திடீரெனப் பெய்த காற்றுடன் கூடிய இம் மழையினால் வெள்ளம் ஏற்பட்டதுடன் பாரிய மரங்கள் பல வேரோடு சரிந்ததால் வாகன நெரிசலும் ஏற்பட்டது உயரமான கட்டடங்கள் சிலவற்றின் கூரைகளும் காற்றோடு பறந்து சென்றன. இந்த மழையினால் புறக்கோட்டைப் பகுதியே பெரும்பாதிப்புக்கு உள்ளானது.

# சீனாவில் வெள்ளப்பெருக்கு; 160 பேருக்கு மேல் பலி

(பீகிங்)

சீனாவின் கிழக்குமாகாணங்களில் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தினால் நூற்றி அறுபதுபேருக்கும் அதிகமானோர் மரணமடைந்திருப்பதாக செய்திகள்தெரிவிக்கின்றன. கடந்த மூன்றாம் திகதி முதல் இப்பகுதியில்பெய்துவரும் பெருமழையினால் மேலும் பல நூற்றுக் கணக்கானவர்கள் பற்றிய தகவல் ஏதும் பெறப்படவில்லை என்றும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து சட்ட மருத்துவத் துறையில் பேராசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் 92-9-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம்

பேராசிரியர் தரம் II ரூபா 12,200-6 X 300-14,000,- (மாதமொன்றுக்கு)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்ப படிவங்களையும் இதர விபா

# திருத்த வேலை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களக் கட்டடம் புனரமைக்கப் பட்டு வருகிறது. சில திருத்த வேலைகள் உட்பட வர்ண பூச்சு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் இவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

# அ. தி. மு. க. தொண்டர் சென்னையில்குத்திக்கொலை

அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. தொண்டரான ஆர். பாண்டியன் நேற்றுக் காலை சென்னையில் அடையாளம் காணப்படாத சிலரால் குத்திக் கொல்லப்பட்டார். அவருக்கு வயது 40.

பாண்டியன் தனது மனைவியோடு காரில் பயணம் செய்து கொண்டிருந்த போது, ஆட்டோ ரிக்ஷோவில் வந்த ஆறு நபர்கள் காரை நிறுத்தி அவரைத் தாக்கியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திருமதி பாண்டியனுக்கு இலேசான காயங்கள் ஏற்பட்டன. அவர் மருத்துவ மனையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கியூபா அரசுக்கு அமெரிக்கா நெருக்கடி

(வாஷிங்டன்)

கியூபாவின்அரசுக்கு எதிராக அமெரிக்கா நெருக்கடி கொடுத்து வருவதாக தெரியவரு... வும், அமெரிக்க சார்பு அரசு ஒன்றைத் தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விழாக்களை நிறுத்தினால் வரிப்பழு ஏறாது - நிமால் சிறிபால

(கொழும்பு)

அரசாங்கம் கம் உதாவ கொண்டாட்டங்களுக்கு செலவிடும் பணத்தை மீதமாக்கிக் கொண்டால் மக்கள் மீது இந்தத்தேவையற்ற வரிப்பழுவை சுமத்த வேண்டியிருக்காது என்று சுதந்திரக்கட்சி எம்.பி. யான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாதுகாப்புச்செலவீனங்களுக்காக மூன்று சதவிகித வரி அதிகரிப்புச்செய்வது தொடர்பான திருத்தச்சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வர விரும்பவில்லை... அவசரகாலநிலையின்கீழ் ஆட்சியைத் தொடர விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இவ்விவாதத்தில் பேசிய ஐக்கிய சோசலிச முன்னணி எம்.பியான அத்தாவுட செனிவரத்தின அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனக் குற்றஞ்சாட்டினார்.

இவ்விவாதத்தில் அரசாங்க தரப்பிலிருந்து பேசிய ஹரேந்திர கொரியா விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தித் தனிநாடு அமைக்கப் போராடும் போது யுத்தத்தை நிறுத்துமாறு எதிர்க்கட்சிகள் அரசைக் கோருவது அர்த்தமற்றது எனத் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்துதிருத்தச் சட்டமூலம் அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

புதுக்குடியிருப்பு

# கூட்டுறவு விழாவில் பெருந்திரளான மக்கள்

... படிவங்களையும் இதர விபரங்களையும்இப்பல்கலைக் கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களைத் தபால்ல் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன்23X10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும்கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:- ஒப்பந்த அடிட்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1992-07-07

(சி'4667)

---

## புலிகளின்

பிச் செல்ல விருப்பம் தெரிவிக்கும் அகதிகளுக்கு எல்லா வசதியும் செய்து தரப்படும் என்றும், எனினும் எவரும் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப் படுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் தென்னாசியப் பிராந்திய நாடுகளின் அமைப்பான சார்க் அமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் இரு நாள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் எட்வார்டோ பெலய்ரோ கொழும்பு வந்திருக்கின்றார்.

## திட்டமிட்டவாறு

பெயரிடப்பட்டு யாழ். கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட இரு பொதிகள் இருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் கப்பலில் இருந்து இப்பொதிகள் இறக்கப்படவில்லை. இப்பொதிகளில் மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும், வினாத்தாள்களுமே இருக்கும் என யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகள் நம்புகின்றனர். இவற்றை அடிப்படையாக வைத்தே மேற்படி பரீட்சை நடைபெறும் என்று கல்விப்பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்.

அதேவேளை இப்பொதிகளை இறக்குவதற்கு அனுமதி பெற்றுத் தரும்படி பரீட்சை ஆணையாளரிடம் யாழ். கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இதற்கான வானொலிச் செய்தி ஒன்றை நேற்று நண்பகலளவில் பரீட்சை ஆணையாளருக்கு அவர் அனுப்பி வைத்தார். (க)

---

டுத்து வருவதாக தெரியவருகின்றது. கியூப அரசுக்கு எதிரான ஒரு குழுவிற்கு ஆயுதங்கள் மற்றும்பயிற்சிகள் வழங்கி அமெரிக்கா ஊக்குவிப்பதாக

## தொண்டா

நலன்களுக்காகஉழைக்கிறார். ஆனால் நம்மவர்களோ நமது சமய நமது சமூக பக்கள் மீதே பாய்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

## 9 உளவாளிகள்

மன்னார்), பல்ராஜசிங்கம் மகேஸ்வரன் (வயது 27 தேனுடையாள், அடம்பன், மன்னார்); இராமையா சிவப்பிரகாசம் (வயது 40 மாணிக்க வளவு, ஓமந்தை, வவுனியா), விஸ்வலிங்கம் நாகராஜா (வயது 44 உயிலங்குளம் மன்னார்), அரியரத்தினம் சிவானந்தம் (வயது 31 பாவற்குளம் வவுனியா), அல்பிரட் டொமினிக் அருள் சேகரம் (வயது 48 நாவற்குளம் ஓமந்தை, வவுனியா), நல்லான் சுப்பையா (வயது 40 வள்ளுவர்புரம் விசுவமடு கிளிநொச்சி), முருகையா மரியாய் வயது 52 பெரியவிளாத்திக்குளம்,ஓமந்தை வவுனியா) ஆகிய ஒன்பது பேருக்குமே விடுதலைப்புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## புத்தரின்

மல் போய் விடும் என்றும்,

மாண்பு மிகு ஜனாதிபதி அவர்கள் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு அரசியல் தீர்வில் நாட்டம் செலுத்தினால் பல ஆயிரக்கணக்கான மனிதஉயிர்களைக் காப்பாற்றிய தொண்டிற்குரியவராகின்றார். என்றும் திவ்ய ஜீவன சங்கம் நயினைக் கிளையின் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

...கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...த்தை முடிவுக்குக்கொண்டு வர விரும்பவில்லை என்றும்,

# மீனம்பாக்கத்தில் வெடிகுண்டுப் புரளி

சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் இந்தியா ஏயர் லயனஸ் விமானம் ஒன்று வெடிகுண்டுப் புரளியினால் நேற்று மூன்று மணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது.

விமானத்தில் குண்டு வைத்திருப்பதாக மாலைநாலுமணியளவில் கிடைத்த தொலைபேசி அழைப்பொன்றைத் தொடர்ந்து விமானம் சோதனையிடப்பட்டதால் இந்தத் தாமதம் என்றுபொலிஸ் தரப்புச்செய்திகள்தெரிவிக்கின்றன

# 1000 கோடி டாலர்கள் ரஷ்யாவுக்கு நிதி உதவி

(வாஷிங்டன்)

ரஷ்யாவிற்கு உலகவங்கியும் சர்வதேச நாணய நிதியமும் வழங்குவதாக இணங்கப்பட்ட ஆயிரம் கோடி டாலர்களை மீண்டும் வழங்கவுள்ளது.

பல்வேறு நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டிய இக்கட்டான சூழலில் இருக்கும் ரஷ்ய அதிபர் பொரிஸ்யெல்சினுக்கு இவ்உதவி கிடைப்பது ஒருவரப் பிரசாதம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

# உலக சைவப் பேரவை அங்குரார்ப்பணம்

(கொழும்புத்துறை)

இந்து சமயத்தின் புனிதத் தன்மை, மகத்துவம், கலாசாரங்களைப் பேணிப்பாதுகாக்கும் நல்ல நோக்குடன் உலக சைவப் பேரவை என்ற அமைப்பை உலக சைவப் பேராளர்களால் சென்னை சைவசித்தாந்த பெருமன்ற மண்டபத்தில் சென்ற 29-02-92ல் ஒன்று கூடி ''உலக சைவப் பேரவை'' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த அமைப்பு மாநாட்டுக்கு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா, தென்ஆபிரிக்கா, இந்தியா முதலிய நாடுகளிலிருந்து ஏராளமான பேராளர்கள் சமுகமளித்திருந்தனர். இம் மாநாட்டுக்கு இலண்டன் மெய்கண்டான் ஆதீனம் தவத்திரு. சிவநந்தி அடிகளார் தலைமை தாங்கி நிகழ்த்தியுள்ளார்.

இப்பேரவையின் தலைமையகம் இலண்டனில் அமையும் பேரவையின் தலைமைச் செயலாளராக இலண்டன் சிவநந்தி அடிகளார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஒரு உலக செயற்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. (24)

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் முதலாம் வார்ட்டில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும், வேலணையைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து (வயது 63) என்பவரின் உறவினர்களை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் உடனடியாகச் சந்திக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

# பெரும்திரளான மக்கள்

(முல்லைத்தீவு)

கூட்டுறவு என்பது நாட்டுறவாகும். கூட்டுறவுச்சங்கங்கள் மட்டும் கூட்டுறவுக் கொள்கைகளை கொண்டிருக்கக் கூடாது. அனைத்து விடயங்களிலும் கூட்டுறவு தேவை. கூட்டுறவு இன்றேல் அனைவருக்கும் தாழ்வு. போராட்டத்தோடு இணைய அனைவரும் ஆண், பெண் வேறுபாடின்றி கூட்டுறவுடன் இடம்பிடிக்க முன்வாருங்கள் என நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற கூட்டுறவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் முல்லைத்தீவு, மணலாறு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அறைகூவல் விடுத்தார்.

புதுக்குடியிருப்பு சி.சி. பாடசாலையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பெருந்தொகையான பொதுமக்களும் கூட்டுறவு ஊழியர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.புவிதரன் மற்றும் அரச அதிபர் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் ஆரம்ப நிகழ்வாக கூட்டுறவுக் கொடியும், தமிழீழத் தேசியக் கொடியும் ஏற்றப்பட்டன.

இக்கொடிபேற்ற நிகழ்வைத்தொடர்ந்து அந்த திரு. தமிழன்பன் தொடர்ந்து உரையாற்றுகையில்; சிங்கள அரசின் தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையின் போது அப்பொருளாதாரத் தடையை ஓரளவு முறியடித்தவர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் சைக்கிள் வியாபாரிகளும் என்பதில் ஐயமில்லை என்றார்.

## வேலைநிறுத்தம் வாபஸ்

இந்தியாவில் இடம்பெற்ற லொறி உரிமையாளர் வேலை நிறுத்தம் நேற்று ஏழாவது நாள் வாபஸ் பெறப்பட்டது.

அரசுக்கும் மோட்டார் வாகனப்போக்குவரத்துக்காங்கிரஸுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடத்த உதவியாக மேற்படி வேலை நிறுத்தப் பிற்போடப்பட்டுள்ளது

---

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

07. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம் 4769

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:- 27-6741, 41-8467, 24-1797, 27-4023, 24-454, 27-8588, 26-3633, 22-9005, 27-1382, 27-2107, 26-4945, 24-9597, 26-2345, 27-3803, 25-7125, 25-4538, 25-4092, 25-375, 70-1382.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 26-7393, 27-5260, 26-3321, 41-4893, 26-9703, 41-9355, 41-2479, 22-8175, 74-0568, 70-9694, 27-7263, 41-5602, 28-2829, 24-4207, 40-919, 25-954, 36-1150, 25-1946, 25-4389.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.